சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். ஓ.எஸ். 173/2022

2023 ம் ஆண்டு **07.09.2023** ம் தேதி முகம்மது ஷெரீப்

என்பவரின் சாட்சியாகிய வாசா 1 ன் வாக்குமூலம்

(1969 ம் ஆண்டில் 44–வது பிரிவின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்கள் முன்னிலையில், சார்பு நீதிமன்ற Grade II Bench Clerk திருமதி.எம்.தெய்வானை என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகம்மது ஷெரீப் | தாலூக்கா | பொள்ளாச்சி |
| க.பெ. (அ) த.பெ. | சாகுல் ஹமீது | சமயம் | முஸ்லிம் |
| கிராமம் | விஜயகணபதி நகர் | வயது | 38 |

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என் தரப்பு ஆவணங்களாக

1.வசாஆ 1 – 20.01.2021 தேதியிட்ட உடன்படிக்கை அசல்

2.வசாஆ 2 – 20.01.2021 தேதியிட்ட கட்டிட வரைபடம் அசல்

3.வசாஆ 3 – இடிக்கப்பட்ட கட்டிடத்தின் புகைப்படம் (9 எண்ணிக்கை) சி.டி.உடன்

4.வசாஆ 4 – 26.07.2021 தேதியிட்ட மாற்றம் செய்யப்பட்ட கட்டிட வரைபடம் அசல்

5.வசாஆ 5 – 26.03.2022 தேதியிட்ட வில்லங்கச் சான்று ஆன்லைன் நகல்

6.வசாஆ 6 – 05.01.2022 தேதியிட்ட கட்டுமானச் செலவின் இறுதி பில் அசல்

7.வசாஆ 7 – 23.02.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்

| | |
|---|---|
| 8.வசாஆ 8 – | 24.02.2022 தேதியிட்ட அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் |
| 9.வசாஆ 9 – | 03.03.2022 தேதியிட்ட இணையவழி புகார் மனுவின் ஒப்புதல் இரசீது நகல் |
| 10.வசாஆ 10 – | 04.03.2022 தேதியிட்ட ஆழியார் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ஜெராக்ஸ் நகல் |
| 11.வசாஆ 11 – | 07.03.2022 தேதியிட்ட அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் |
| 12.வசாஆ 12 – | 07.03.2022 தேதியிட்ட புகார் ஏற்ப்பு ரசீது அசல் |
| 13.வசாஆ 13 – | வங்கி கணக்கு பரிவர்த்தனை அறிக்கை நகல் |

<u>3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

முதல் பிரிவாதி 3 ம் பிரதிவாதியிடம் வழக்கு சொத்தை வில்லங்கம் எதுவும் இன்றி அடமானம் செய்து அதை 5295/2021 ம் எண்ணாக பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அடமானத்திற்கு முன்பு நான் சட்டபூர்வமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு வரவேண்டிய தொகை முதல் பிரதிவாதியிடம் தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றாலும் 3 ம் பிரதிவாதி எவ்விதத்திலும் தொகை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கானது 1 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதியிடம் செய்த அடமானத்தை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி